**ஓம் ஈஸ்வராய நமஹ!**

## ஆறுமுகனார் தீட்சையின் போது (02 Feb 2020), அவர் உரைத்த உபதேசம்

ஆறுமுக உபதேசம்

கலியுலகில் பிறவி கண்ட
ஆன்மாவே உணர்ந்திடுவாய்
கருமங்கள் புரிவதினால்
பிறவிகளும் தொடர்ந்திடுமாம்
இயங்காது நிலைத்துவிட
உடல்களினால் இயலாது
இயக்கத்தின் அருள் கொண்டே
பிறவாமை பெற வேண்டும்

எண்ணங்களும் சொற்களும்
செயல்களாய் உருமாறிட
கருமங்கள் யாவுமே
பதிவுகளாய் உருகொள்ளும்
பதிவுகளை நீக்கிடவே
தீட்சைகளும் அருளிடுமே
அடித்தளமே அழிவுற்றால்
பதிவுறுதல் தடையுறுமே

பதிவுகளைக் கணக்குற்றே
பிறவிகளும் தொடர்ந்திடுமே
பரமனவர் திருவருளால்

பிறவாமை நிலைத்திடுமே
அடித்தளமே அழிந்திடவே
தீட்சைகளும் அருளிடுமே
பிறவாத பெருநிலையை
தீர்க்கமுற உணர்த்திடுமே

விழிகள் கொண்டு ஊடுருவி
வித்தைதனைக் கற்றறிந்தால்
எண்ணம், சொல், செயல் யாவும்
வினைகளாய்த் திரிந்திடாது
திரைகளை நீக்கிடவே
தீயின் துணை வேண்டும்
தீயினைத் தூண்டிடவே
தாயின் அருள் வேண்டும்

உட்திரைகள் ஏழுண்டு
உப்பின் சாரம் ஏழுண்டு
உப்புத் திரைகள் நீங்கிடவே
உணர்வின் உச்சம் நிலைத்திடவே
உத்தம தீட்சை உதவிடுமே
உருவில் அருவினை உணர்த்திடுமே
உன்னை அறிவாய் மானிடனே
உன்மத்தம் அழிப்பாய் மானிடனே

தீயினைத் தீண்டியே துவங்கிடுவாய்

தீண்டா நிலைதனில் தொடர்ந்திடுவாய்

அன்னையின் தீண்டலில் உயர்ந்திடுவாய்

ஆன்ம ஒளியினைத் தீண்டிடுவாய்

தீயின் வெப்பம் ஏற்றிடுவாய்

தீண்டா வெப்பம் உணர்ந்திடுவாய்

குருவின் திருவருள் பெற்றிடுவாய்

அருளின் உச்சம் பற்றிடுவாய்

திருவடி தீட்;சை உயிரினை உணர்த்தும். தீபத்தீட்சை உணர்வினைப் பெருக்கும். தீண்டா தீட்சை கருமத்தை அழிக்கும் தீட்சையின் உச்சம் அகந்தையை நீக்கும் முயற்சிகள் புரிந்தால் சத்தியம் நிலைக்கும் பயிற்சிகள் புரிந்தால் சன்மார்க்கம் தழைக்கும் தளர்ச்சிகள் நீங்கினால் தர்மம் ஓங்கும் தளர்வுறாத மனமே ஈசனைக் கலக்கும்.

பல்வேறு பிறவிகளை இடையுறாது ஏற்று தொடர் பயணம் புரிந்திடும் ஆன்மாவினை உணருங்கள். அறுசுவையும் உணர்வே, ஆன்மாவும் உணர்வே. உணர்வின் மீது கொண்ட பற்றுகளை நீக்கினால் எஞ்சுவதும் ஈச உணர்வே. உணர்வின்றி வாழ்வில்லை, வாழ்வின்றி வளமில்லை. ஈசனைப் பற்றிவிட, உணர்வு கொண்டு கலப்புற, ஆன்மாவினை விடுவித்தருள வேண்டும்.

ஒன்றினைப் பற்றியே மேன் நிலைகளை எய்திட இயலும். உணர்வு கொண்டு பற்றி நின்றிட பெருவெளியும் வசமுறும். பற்றுகளைத் துறந்தால் மாத்திரமே பரமனை அடைய இயலும். எனினும் ஒன்றின் மீது கொண்ட பற்றினை மற்றொன்றின் மீது மாற்றி அமைத்திடல் வேண்டும். ஒன்றினையே பற்றி நின்றால் முன்னேற்றம் தோன்றிடாது.

அறுசுவையைப் பற்றி நின்றால் உடல் வளரும், ஆன்மாவினைப் பற்றி நின்றால் உயிர் வளரும். ஈசனைப் பற்றி நின்றால் ஆன்ம ஒளி பெருகும். பரவெளியைப் பற்றி நின்றால் நிலைகள் உயரும். பற்றுகளைத் துறந்திட்டால் பரகதியே எனினும் படிநிலைகள் பல உண்டு என்றே அறிந்திடுவாய். பற்றுகளை மேன்நோக்கிச் செலுத்திடுவாய், பதமுறுவாய் பண்படுவாய். உச்சத்தில் நிலைத்திருக்கும் சூரியனும் பற்று கொண்டே வலம் வருவார். கோள்களும் அனைத்துமே பற்று கொண்டே வலம் வருகின்றன.

ஈர்ப்புவிசை என்பதே பற்று நிலையாகும். பொருட்களின் மீது தோன்றும் ஈர்ப்பு நிலையும் பற்றே, உறவுகளின் மீது தோன்றும் ஈர்ப்பு நிலையும் பற்றே, பற்றுகளைத் துறந்திட்டால் பரகதி வசப்படும் என்றே அறிந்திடலாம், எனில் எவ்விதம் பற்றுகளைத் துறப்பது?

ஆன்ம விடுதலை என்பது புவியின் பற்று விசை எனப்படும் ஈர்ப்பு விசையினின்று விடுபடவே உதவிடும். எனினும் புவியினை விடுத்துப் பயணித்தால் மற்றுமோர் ஈர்ப்பு விசையானது ஈர்த்துவிடும். சூரியக் கோளும் பிற கோள்களும் உள்ளடங்கிய விண்ணுலகம் என்பது ஈhப்பினைச் செலுத்திப் பற்றிவிடும். ஆன்மாவானது விண்ணுலகில் ஈர்ப்பு கொண்டுப் பற்றிட முனைந்தால் மாத்திரமே மண்ணுலகப் பற்று விடுபடும். அதன் பொருட்டே தெய்வ நிலைகள் யாவும் உருவாக்கப்பட்டு ஈர்ப்பினையும் செலுத்திட முற்படுகின்றனர்.

விண்ணுலகப் பற்று ஒன்றே புவியினைத் துறந்து பிறவா நிலையினை எய்திட உதவிடும். பின்னர் அண்டத்தின் மீது பற்று கொண்டே விண்ணுலகப் பற்;றினைத் துறந்திடல் வேண்டும். பேரண்டப் பற்று அண்டத்தினைத் துறந்திட உதவிடும், பெருவெளியின் மீது கொண்ட பற்று பேரண்ட நிலைகளைக் கடந்து விட உதவிடும். பெருவெளியில் சென்று அமர்ந்தால் ஆற்றல்கள் அற்ற சூன்ய நிலை எனும் வெற்று நிலையினை உணர்ந்திடலாம். அதனைக் கடந்து பற்றிட மேம்பட்ட நிலைகள் அற்ற நிலையில் பற்று என்பது முற்றிலுமாக அழிவுறும்.

பற்று என்பது பலபடிநிலைகளைக் கொண்டது. அதனைப் போன்றே திரைகளும் பல படிநிலைக் கொண்டது. ஒன்றினைத் துறந்திட மற்றொன்றினைப் பற்றியே செயல்புரிந்திடல் வேண்டும். அதன் பொருட்டே ஒவ்வொரு திரைகளும் விலகிவிட தனித்த தீட்சைகள் வழங்கப்படுகின்றன. மாயத்திரைகளும், கர்மத்திரைகளும், ஆணவத்திரைகளும் ஒன்றின் பற்றினைத் துறந்து மற்றொரு பற்றினை ஏற்றிடவே முனைந்திடும்.

மாயத்திரையினை நீக்கிட கர்மத் திரையினைப் பற்றியே செயல்புரிந்திடல் வேண்டும். கர்மத்திரையினை நீக்கிட ஆணவத்திரையினைப் பற்றியே செயல்புரிந்திடல் வேண்டும். ஆணவத் திரையினை நீக்கிட ஏழாம் திரையான உயிரின் கூடு எனும் திரையினைப் பற்றியே செயல் புரிய வேண்டும். ஒன்றின் மீது கொண்ட பற்றினை முழுமையாகத் துறந்திடும் தருணம் வரை ஈர்ப்பு என்பது தோன்றிக் கொண்டேயிருக்கும். அதன் பொருட்டே ஆணவத்திரையான மூன்றாம் திரையினைத் துறந்து சென்றுவிட தீட்சையினை

பெற்றிட்டாலும் மூன்று திரைகளுக்குமான பற்றினைத் துறந்துவிட பயிற்;;;சிகள் புரிந்திடல் வேண்டும்.

அனைத்து ஈர்ப்பு விசைகளையும் கடந்துவிட்டால் எங்கும் பயணிக்கலாம் எச்செயலும் ஆற்றிடலாம் என்றுணர்க. உயர் தெய்வநிலை ஆன்மாக்கள் அனைத்தும் முழுமையான பற்றினைத் துறந்த நிலையில் மாத்திரமே எவ்வுலகிலும் வசித்திட இயல்கின்றது. பற்று என்பது ஈர்ப்பு விசையினால் உருவாகின்றது. மானுடர்கள் கொண்ட பற்றுகள் யாவும் விழித்திரைகளிலே அடங்கியுள்ளது. அவற்றினைத் துறந்திட்டால் புவியின் ஈர்ப்பு விசையானதும் மெல்ல துண்டிக்கப்படும்.

ஆன்ம விடுதலை நிகழ்ந்தேறிட வேண்டுமெனில் புவியின் ஈர்ப்பு விசையினைக் கடந்திடல் வேண்டும். தீட்சைகளின் மூலம் உயர்நிலைகளை எய்திட ஆன்மா புவியின் மீது கொண்ட பற்றினைத் துறந்து ஈர்ப்புவிசையினின்று விடுபடும். ஆன்மாவின் விடுதலை எனும் முக்தி நிலை எவ்விதம் கிட்டும்? பிறவாப் பெருநிலை என்பது யாது?

உயிரின் கூடு எனும் ஏழாம் திரை ஒன்றே புவியீர்ப்பு விசையினை ஒத்த ஆற்றல் உடையது. நில மூலக்கூறுகள் மற்றும் நீர் மூலக்கூறுகள் அடங்கிய ஏழாம் திரை என்பது உயிரின் கூடு என்பதாகும். முக்தி நிலை பெற வேண்டும். எனில் ஏழாம் திரை விலகிடல் வேண்டும். ஆறு திரைகளும் ஒவ்வொன்றாய் அகன்றால் மாத்திரமே ஏழாம் திரை புலப்படும். ஏழாம் திரை அகன்றால் மாத்திரமே ஆன்மா விடுதலையுறும்.

இயற்கையின் நியதி இவ்விதமே அமைந்திருக்க, நியதிகளை, மிஞ்சிய செயல்கள் யாவும் ஆலயத்தினிலே நிகழ்த்தப்படுகின்றது. திரைகளை நீக்கிடாது ஆன்ம விடுதலையும் அளிக்கப்படுகின்றது. எனினும் முறையான பயிற்சிகளைத் தொடர் செயலாய் மேற்கொண்டால் திரைகள் விலகிட, புவியின் பற்று எனும் ஈர்ப்பு விசையும் விடுபடும். ஏன் இவ்விதம் உயர் ஆன்மாக்களால் விதிகள் யாவும் மாற்றி அமைக்கப்படுகின்றன என்றே சிந்தனை புரியுங்கள்.

மூலக்காரணம் என்பது மூன்று உண்டு என்றறிக. முதன்மையான காரணம் என்பது புவியின் வீரியமான சுழற்சியேயாகும். இரண்டாவது காரணம், வீர்pயமான சுழற்சியின் மூலம் உருவாகும் வீர்pயமான ஈர்ப்பு விசை. மூன்றாவது காரணம் என்பது வீர்pயமான ஈர்ப்பு விசையினால் வீரியமாய் உருமாறும் விழித்திரைகளே என்றுணர்க. ஒவ்வொரு நிகழ்வுகளும் மற்றொரு நிகழ்வினை உருமாற்றி அமைத்திடும்.

கலியின் எல்லையின் எரிபொருளின் வீரியத்தன்மையினாலும், நச்சுக்கழிவுகளின் அதிகரிப்பினாலும், அமிலத்தன்மையின் மூலம் இயங்குவதினாலும் புவிக்கோள் என்பது விரைந்தும், வீரியமாகவும் சுழல்கின்றது. புவியின் சுழற்சியின் மூலம் அதனின்று வெளித்தோன்றும் நீர், நில மூலக்கூறுகள் அடங்கிய ஈர்ப்பு விசையின் ஆற்றல் பெருகின்றது. புவியீர்ப்பு விசை அதிகரிப்பதினால் சூரியனின் ஈர்ப்பு விசை குன்றுகின்றது.

இறையாற்றல் எனப்படும் சூரிய ஆற்றலினின்று வெளித்தோன்றும் மின் காந்த இழைகள் யாவும் புவியன் வீரியமிகு ஈர்ப்பு விசையினால் கட்டுண்டு வெகு தொலைவினிலேயே நிலைநிறுத்தப்படுகின்றது. இறையாற்றலாகிய மின் காந்த இழைகளை ஏற்றிட இயலாத நிலையில் மானுட ஆன்மாக்கள் செயற்கை ஒளியலைகளை நாடியே செல்கின்றன. அதன் மூலம் கழிவுகளும் பெருகுகின்றன.

அமிலக் கழிவுகள் யாவுமே திரைகளாய் உருமாறி உயரிய சவ்வுப்படலங்களாய் நிலைக்கின்றன. அதன் பொருட்டு ஆன்மாக்களும் விடுபட இயலாத நிலை உருவாகின்றது. இயற்கையின் மாற்றங்களால் கலியுலக எல்லையில் இந்நிகழ்வு நிகழ்ந்தேறிடும் எனும் காரணத்;தினால் ஆன்மாக்களை விடுவித்தருளிட நாங்கள் முனைகின்றோம். விழித்திரைகளை நீக்கினால் ஆன்மாவினை விடுவிப்பது எளிதாகும்.

மூன்றாம் படி நிலையில் ஆணவத்திரைகள் விலகிட அருளப்படும் இத்தீட்சையின் தாத்பர்யங்களை உணர்ந்திடல் வேண்டும். மாயத்திரை மற்றும் கர்மத்திரை நீக்கம் என்பது குருவின் அருளால் நிகழ்ந்தேறிடும். எனினும் குருவின் தீண்டலின் மூலமே இறையாற்றல் சிரசினை ஊடுருவி மூன்றாம் திரையான ஆணவத்திரையினை நீக்கிடும் என்றுணர்க.

இரு விழிகளிலும் உள்ள மூன்றாம் திரையே ஆறாம் திரை என்பதாகும். ஒவ்வொரு விழியின் பின்புறமும் அமைந்துள்ள ஆணவத் திரை என்பது மூன்று அடுக்களைக் கொண்ட வலுவான திரையாகும். விழிகளின் மூலம் அதனை ஊடுருவிச் சென்று அழித்திட முற்பட்டாலும் முதன்மைப் படலமே அழிவுற முனைந்திடும். ஏழாம் திரையான உயிரின் கூட்டோடு தொடர்பு கொண்ட ஆணவத்திரையின் உட்படலம் என்பது எளிதாய் அழிவுறாது.

குருவாய் செயல்புரியும் அன்னையின் மூலம் உயர் ஆன்மாக்களின் ஆற்றல் பரிபூரணமாய் ஊடுருவும் என்பதனை முழுமையாக ஏற்றிடுங்கள். ஆணவம் என்பது கொடிய நச்சுக் கழிவுகளால் உருவான திரையாகும்.

இத்தீட்சையின் மூலம் நஞ்சுகள் அகற்றப்பட்டன என்றும் அவற்றை குருவின் மூலம் ஆறுமுகனாகிய யாமே ஏற்றிட்டோம் என்பதனைப் பரிபூரணமாய் உணர்ந்திடுங்கள்.

உயரிய ஆற்றல் கொண்ட ரேணுகா தேவியானவர் குரு அன்னையின் ஒற்றை அணுவினை ஆண்டிடும் இத்தருணத்தில் யாம் அளித்திடும் தீட்சையின் மூலம் ஆற்றல்கள் யாவும் குரு அன்னையின் ஒற்றை அணுவினை ஊடுருவி கரங்களினால் ஏற்கப்பட்டு, தீட்சை பெறுகின்ற மானுடர்களின் உட்செலுத்தப்பட்டு, அவர்களது ஒற்றை அணுவினை அடைந்து பின்னர் ஆணவத்திரையின் மையத்திற்குச் சென்றிடும் என்றே உணர்ந்திடுக.

ஆணவத்திரையினை ஊடுருவிச் சென்றிடும் எமது ஆற்றல்கள் யாவும் திடமாய் வீற்றுள்ள அமிலக்கழிவுகளைத் திரவமாய் உருமாற்றி பின்னர் வாயுவாய் உருமாற்றி வெளியேற்றிடும் என்றும் அக்கழிவுகளாகிய கொடும் நஞ்சினை யாமே ஏற்று, அழித்து, நல்லாற்றல்களாய்த் திரித்திடுவோம் என்றும் பரிபூரணமாய் உணர்ந்திடுங்கள்.

ஏற்றிட்ட தீட்சையின் மூலம் உங்களது மாய, கர்ம, ஆணவங்கள் யாவும் எம்மால் அகற்றப்பட்டது என்றும் அதன் வீரியத்தினையும் யாமே ஏற்றோம் என்றும் பூர்வ பலன்களாலும் எம்மோடு ஒளியிழையால் கொண்ட தொடர்பின் மூலமுமே இச்செயல் நிகழ்ந்தேறியது என்றும் பரிபூரணமாய் உணர்ந்திடுங்கள்.

யுக மாற்றம் நிகழ்ந்தேறிடவும், ஆன்மாக்களை விடுவித்திடவும் எமக்கு உறுதுணையாக செயல்புரிந்திட வாக்கு நல்கிய குரு அன்னைக்கும் உயரிய நன்றிகளைச் செலுத்திடல் வேண்டும். இடைப்பாலமாய் நின்று உயரிய செயலுக்குத் துணை புரிந்திட்ட குருவினை ஏற்றுத் துதிப்போர் உயர் பலன்களை எய்திடுவர்.

காரண காரியங்களையும், ஆற்றிடும் செயல்களையும் ஒன்றிணைத்து நிகழ்வதனை உணரக்கடவது. தீட்;சைகளை ஏற்றிட்ட ஒவ்வொரு ஆன்மாக்களும் புனிதம் அடைவர் என்றும் உயர் நிலைகள் சித்திக்கும் என்றும் பரிபூரணமாய் நம்பிக்கைக் கொண்டு ஈசனையும், ஆதிசக்தியினையும் தொழுதிட்ட நற்கதியினை, எய்திடுங்கள்.

**வாழ்த்துகின்றோம்.**